# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.3-

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் பி.சாவ்லா அவர்களின் மறைவு செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இந்தியாவின் தேர்தல் முறையை வலுப்படுத்துவதில் அவரது பதவிக் காலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கண்டது. அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### வெற்றுச் சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல் பூச்சுக்களும் கொண்ட அறிக்கை:

# ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனைதானா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, பிப்.3–**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–**

ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஓரவஞ்சனைதானா? தமிழ்நாடு என்ற பெயர் கூட தொடர்ந்து இடம் பெறுவதில்லையே?

எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதி செய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை?

நெடுஞ்சாலைகள், - இரயில்வே திட்டங்கள், - கோவை, மதுரை மெட்ரோ இரயில் எதையுமே கொடுக்காதது ஏன்? எது தடுக்கிறது?

பொருளாதார ஆய்வறிக்கை, உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதி ஆயோக் அறிக்கை என ஒன்றிய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது தமிழ்நாடு. பக்கத்துக்குப் பக்கம் தமிழ்நாட்டின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழ்நாடு முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது ஏன்?

தமிழ்நாடு ஏற்காத கொள்கைகளையும், மொழியையும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தில் சிறு துளியையாவது நிதி ஒதுக்கீட்டில் காட்ட வேண்டாமா?

ஒன்றிய அரசானது தன்னுடைய திட்டங்களில் தன்னுடைய பங்குத் தொகையைக் குறைத்து கொண்டே வருவதால், மாநில அரசின் நிதிச்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பல்வேறு திட்டங் களில் மிகவும் குறைவாக மானியத் தொகையை வழங்கும் ஒன்றிய அரசு, அதிலும் பல்வேறு கட்டுப்பாடுகளைத் தமிழ்நாட்டிற்கு மட்டும் விதித்துள்ளது. விளம்பர மோகம் கொண்ட ஒன்றிய அரசு, திட்ட விளம்பரங்களில் ஒன்றிய அரசின் முத்திரை இடம் பெறாவிட்டால், திட்டம் சரியாகவும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டிருப்பினும், நமக்குச் சேரவேண்டிய திட்ட நிதியை விடுவிப்பதில்லை. விளம்பரம் ஒன்றையே பாராட்டும் ஒன்றிய அரசு, மக்கள் நலனில் எந்த வொரு அக்கறையையும் காட்ட மறுக்கிறது.

வெற்றுச் சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல் பூச்சுகளும் கொண்ட அறிக்கையின் மூலமாக இந்திய நாட்டு மக்களை வழக்கம் போல் ஏமாற்றும் பா.ஜ.க..வின் பம்மாத்து நாடகம் தொடர்கிறது.

எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளதோ, எங்கு பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் உள்ளதோ அந்த மாநிலத்துக்கு மட்டும்தான் திட்டங்களும் நிதியும் அறிவிக்கப்படும் என்றால் 'ஒன்றிய' நிதிநிலை அறிக்கை என இதனை அழைக்க வேண்டிய அவசியம் என்ன?

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

### கடலூர் மாவட்டம் - நல்லூர் ஊராட்சியில் ரூ.50 லட்சத்தில்

# அரசு வட்டார பொது சுகாதார நிலையம் - திட்டக்குடியில் கல்லூரி மாணவியர் விடுதி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார்!

கடலூர், பிப்.3 -

கடலூர் மாவட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அரசு வட்டார பொது சுகாதார நிலையம் மற்றும் அரசு கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு வட்டார பொது சுகாதார நிலையத்தினை நேற்று (01.02.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு தாய் சேய் நலப்பெட்டகங்களை வழங்கினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களுக்கு உயர்தரமான சுகாதாரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதற்காகவும், மாணவர்களுக்கு எளிதில் கல்வி சென்றடையும் வகையிலும், தமிழ்நாடு அரசினால் அவ்வப்போது அறிமுகப்படுத்தும் திட்டங்களின் பயன்கள் விரைந்து பொதுமக்களை சென்றிட வேண்டும் என்பதற்காகவும் ஏராளமான உட்கட்டமைப்பு திட்டங்களை ஏற்படுத்தியும் மறுசீரமைப்பு மேற்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக 45 வயதுக்கு மேற்பட்ட இரத்த அழுத்தம், நீரிழிவு நோயாளிகளின் வீடுகளுக்குத் நேரில் சென்று சிகிச்சை அளிக்கும் மக்களை தேடி மருத்துவம் திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் நல்லூர் ஊராட்சியில் 15ஆவது மானிய நிதியின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்பெற்று இன்றைய தினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்ப ட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 68 கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இதில் 57 பள்ளி விடுதிகளும், 11 கல்லூரி விடுதிகளும் அடங்கும். திட்ட க்குடி வட்டத்தில் 5 பள்ளி விடுதிகளும் செயல்பட்டு வந்தன.

மேலும், திட்டக்குடி பகுதியில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவியர்களின் நலன் கருதி மாணவிகள் தங்கி பயிலும் வசதிகளுடன் இன்றைய தினம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், இவ்விடுதியில் மாணவியர்களின் பாதுகாப்பு வசதி கருதி கண்காணிப்பு கருவிகள், கல்வி கற்பதற்கு ஏதுவாக கணினியுடன் கூடிய செம்மொழி நூலகம் உள்ளிட்ட சிறப்பம்சங்களுடனும் உள்ளது. இவ்விடுதியினை சிறப்பாக பயன்படுத்தி கொண்டு மாணவிகள் வாழ்வில் மென்மேலும் உயர வேண்டும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, துணை இயக்குனர் சுகாதார பணிகள் மரு.பொற்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பொது வாழ்வில் நேர்மை – உழவர்கள் மீது பெரும் அக்கறை கொண்டவர்:

# ஓமந்தூரார் படைத்த சாதனைகள் ஏராளம்!

## பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, பிப்.3 -

சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சருமான ஓமந்தூரார் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தலைசிறந்த காந்தியவாதியும் விடுதலை பெற்ற இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சருமான ஓமந்தூரார் அவர்களின் பிறந்தநாள் இன்று.**

**ஆலய பிரவேசச் சட்டம், ஆதி திராவிடர் நலனுக்கெனத் தனித்துறை, ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இந்து சமய அறநிலையச் சட்டம் எனக் குறுகிய காலத்தில் அவர் படைத்த சாதனைகள் ஏராளம்.**


**பொதுவாழ்வில் நேர்மை, உழவர்கள் மீது பெரும் அக்கறை என வாழ்ந்த அவருக்கு என் புகழஞ்சலிகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறையின் சார்பில் மனிதநேய வார நிறைவு நாள் விழா மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார் (தென்காசி) ஈ.ராஜா (சங்கரன்கோவில்)சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

# உயிர்த்திருப்பீர், உளமிருப்பீர், உலகிருப்பீர்!



## பேராசிரியர் மா.செல்வராசன்

காஞ்சியிற் பிறந்தவரே
கல்வியிற் சிறந்தவரே
தீஞ்சுவைத் தமிழாலே
திக்கெட்டும் கவர்ந்தவரே
பூஞ்சையாய்த் தமிழர்கள்
போகாமல் பொலிவதற்கு
வாஞ்சையாய்க் கழகத்தை
வலிமையாய் வளர்த்தவரே!
பூஞ்சோலை, புனலருவி
புலர்காலை போன்றவரே!
ஊஞ்சல்போல் ஆடாமல்
உறுதியாய் உயர்ந்தவரே!

பேரறிஞர் அண்ணா,நீர்
பிறந்ததனால்
அல்லவோ
பாரறியும் தமிழருமை
பழம்பெருமை
தனித்தன்மைச்
சீரறியா நிலையிலே
சிறுத்திருந்த
தமிழரிடம்
ஊறறிய உரைத்தீரே,
உணர்ச்சிமிக அறிவுபெற
நீர்அருவி பொழிந்தீரே,
நெடும்புரட்சி புரிந்தீரே,
காரறியும் இருளான
கல்லாமை அறியாமை
தீரவே வாழ்நாளைத்
தியாகமும் செய்தீரே!

சீர்திருத்தம் பகுத்தறிவு
செம்மாந்த தன்மானம்
ஆர்த்தெழப் பேசியவர், ஆராய்ந்தே எழுதியவர்
போர்த்தெறிந்தீர் மூடநிலை,
பேதங்கள் சாதிமதம்
நீர்த்தொழியத் தமிழரின்
நினைப்புயர நிலையுயர
வார்த்தெடுத்த நூல்களோ
வலியநெடு வேல்களே!

போர்த்தொழில் புரியாமல்
புத்தியைத் தீட்டுகென்றீர்,
ஈர்த்தவர் உமைப்போல
இளைஞரை இன்றுவரை
பார்த்ததில்லை,கேட்டதில்லை,
பனுவலிலும் படித்ததில்லை
தேர்த்திரு விழாக்கூட்டம்
சிறுத்துவிடும் அளவிலே
ஊர்திரண்டு நின்றதே
உம்வழி சென்றதே,
காத்திருந்து கேட்டதே,
கண்மூட மறந்ததே!

தார்அணிந்த சேரசோழத்
தமிழ்வழுதி வேந்தர்போல்
நீர்எழுந்தீர்,சூரிய
நிழலிலே நிறுத்திவிட்டீர்!
மார்தட்டி நிற்கின்றார்
மக்களெலாம் என்றால்,உம்
கூர்மதி நேர்வழி
கொள்கைமொழி கருத்தொலி
வேராகும், விதையாகும்
விரிந்தபெரு மரமாகும்!

ஏராக உழுதுழுது
எண்ணப்பயிர் வளர்த்தீரே
நாராகக் கிழியாமல்
நரம்பிரும்பாய் ஆக்கினீர்
வீரத்தை உணர்த்தினீர்
வித்தகம் ஊட்டினீர்
நேரத்தைக் காட்டினீர்
நிலைமையை மாற்றினீர்!

யாரிங்கே உமைப்போல
இரவுபகல் காலைமாலை
பாராமல் கழகமெனும்
பாசறையைக்
கண்டவரே,
சேராமல் தமிழரெலாம்
சிதறிய நிலைமாற்றச்
சோராமல் உழைத்தவரே,
சொல்எழுத்தால்
உரைத்தவரே!

சாராமல் வடவரைத்
தறுகண்மை யோடெதிர்த்து
மாறாது ஆட்சியென
மமதையோ டிருந்தோரை
ஈறாக ஒழித்துவிட்டீர்,
எழமுடியா தொடித்துவிட்டீர்,
ஏறாமல் கிடக்கின்றார்
ஏங்கியே நடக்கின்றார்
நீறாகப் போய்விட்டார்
நிமிராமல் சாய்ந்துவிட்டார்,
சூறாவளி யாகவே
சுழன்ற உம் வேகத்தில்
பாறாங்கல் உடைந்தது;
பலபலவாய் உதிர்ந்தது!
மாறாக இங்கெவரும் மலராமல்
செய்துவிட்டீர்;
பேறாகப் பெற்றுள்ளோம்
பெருந்தகையே உமைநாங்கள்
கூறாத நாளில்லை,
கொண்டாடா வேளையில்லை!

வீழ்ந்திருந்த தமிழர்கள்
விசையுற்றே அறிவினால்
தாழ்ந்திருந்த தமிழகத்தைத்
தலைநிமிரச் செய்வதற்கு
வாழ்ந்திருந்த காலமெல்லாம்
வற்றாத கடலாக
ஆழ்ந்திருந்தே எண்ணமெனும்
அலைகளை எழுப்பியே
சூழ்ந்திருந்த தடைகளைச்
சுக்குநூறு ஆக்கினீர்!

சாய்ந்திருந்த கோபுரம்
தலைதூக்கி நிற்பதுபோல்
தேய்ந்திருந்த நிலவொளி
தேயாமல் திகழ்தல்போல்
காய்ந்திருந்த காவிரி
கரைபுரண்டு ஓடுதல்போல்
தீய்ந்திருந்த மரஞ்செடிகள்
திரும்பவும் தளிர்த்தல்போல்
வேய்ந்திருந்த வான்கூரை
வெங்கதிர் வளர்தல்போல்
பாய்ந்தெழுந்து வேங்கையாய்ப்
பகைமுடித்து எழுகின்றார்,
ஓய்ந்திருந்த தமிழர்கள்
ஓங்கியுயர்ந்து
ஏறுகின்றார்!

பெரியாரைப் பிரிந்தாலும்
பெரியாரே தலைவரென
வரித்தவரே, கிஞ்சிற்றும்
வசைபாடா திருந்தவரே,
சிரித்தபடி முரண்களைத்
தீண்டாமல் சென்றவரே,
பெருத்த ஒரு பிள்ளையாரை
உடைக்கமாட்டேன்
பிள்ளையார்க்குப்
பருத்த ஒரு தேங்காயும் உடைக்கமாட்டேன் என்றுநீர்
உரைத்தபெரும் பேரறிவால்
உலகத்தை வியக்கவைத்தீர்!

விரித்தவலை எதிலுமே
வீழாமல் நின்றவரே,
திரித்தநூல் பூண்டோரைத்
தெளிவாக உணர்ந்தவரே,
உரிமையுணர் வுதிரத்தில்
ஓடத்தான் விட்டவரே,
அரிதரிது உம்முடைய
ஆளுமைபோல் அரசியல்
சரித்திரத்தில் காணுதல்
சாலவும் ஒல்லாதே!

திராவிடன்தான் தமிழனெனத்
தெளிவாகச் சொன்னவரே!
பராவியே இவ்வையம்
பண்பட்ட மாந்தனென
உராய்ந்தெழும்
வாள்போல
ஒலிகிளப்பி உரைத்தவரே!
தராவிடில் திராவிடம்
தன்னாட்சி அமையுமென
விராவியே அன்றுநீர்
விளம்பிய வித்தகத்தால்
அறாமலே இன்றுவரை
ஆளவும் வைக்கின்றீர்!

கடலோரம் நீர்உறங்கும்
காரணத்தால் அகன்றபெருங்
கடல்அலைகள்
கரைந்துபோ கின்றனவே!
உடனிருக்கும் கலைஞரும்
ஓயாமல் காக்கின்ற
கடமையைச் செய்வதுபோல்
கண்ணுறக்கம்
கொள்ளாரே!

தடம்மாறாத் தளபதியோ
தவறாமல் நினைந்தும்மை
வடக்கினை எதிர்க்கின்றார்,
வல்லாண்மை மறுக்கின்றார்!
இடக்கினைச் செயுமவரை
எதிர்கொண்டு நிற்கின்றார்!
விடத்தினை முறிக்கின்ற
விந்தையும் உமதன்றோ!
கொடுக்கினை நறுக்குகின்ற
கொள்கைவாள்
கொடுத்தவரே,
படக்கூடாத் துயரங்கள் பட்டபின் தமிழர்கள்
விடக்கூடா துரிமையென
விதிசெய்து முடித்தவரே,
தொடமுடியா உயரத்துச்
சூரியன் நீரன்றோ!

எண்ணாமல் சிலரிங்கே
இல்லைநீர் என்கின்றார்,
அண்ணாநீர்
இருக்கின்றீர்
அகல்வானம் உள்ளவரை,
வெண்கதிர் தண்ணிலவு
வெளிச்சமாய் விளங்குமட்டும்,
எண்ணாமீன் விசும்பிலே
எழிற்சுடர் இலகுமட்டும்,
தண்ணீரால் பெருங்கடல்
ததும்பிடும் வரையிலும்,
உண்ணுநீர் போன்றவரே,
உலவுகாற்று ஆனவரே,
எண்ணத்தில் செயலிலே
எப்போதும் இருப்பீர்நீர்,
மண்ணிலே மக்களின்
மனங்களில் வாழுவீர்!

புண்ணுற்று நீர்போகப்
புவியெலாம் புலம்பியே
கண்ணீரைக் கடலாக்கிக்
கதறியே அழுதழுது
அண்ணாநீர் வாரிரோ,
ஆளாமல் போவிரோ
உண்ணின்றே எழுந்தகுரல்
உயிர்க்காமல் போகுமா?
திண்ணமாய் நீரென்றும்
திகழுவீர் நெஞ்சிலே,
வண்ணமாய் விளங்குவீர்,
வழிநடத்திச் செல்லுவீர்,
பண்மயங்கும் குரலாலே
பார்மயங்கி நின்றபின்
உண்மையாய் உயிர்த்திருப்பீர்,
உளமிருப்பீர்,
உலகிருப்பீர்!